O.S. No: 131/2021

பெயர் :தமிழரசி

**வா.சா. 2**

20-08-2024

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். இந்த வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட மற்றொரு வழக்கான 283/2018 வழக்கில் நான் என் கணவருக்கு பவர் ஏஜென்டாக செயல்பட்டு வருகிறேன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் என் கணவருக்கு பவர் ஏஜென்ட் என் மாமியார். இந்த வழக்கு என் வீட்டுக்காரருக்கு அவருடைய தம்பி பணம் தருகிறேன் என்று எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தார். போய் கேட்கும்போது கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். அதனால் இந்த வழக்கு. அவ்வாறு எழுதி கொடுத்த பத்திரத்தில் நான் சாட்சி கிடையாது. ஆனால் கூட இருந்தேன். ஆபீஸ் போய் டைப் பண்ணி எடுத்துவந்து கையெழுத்து போட்டுக்கொடுத்தார். எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1தான் என்னிடம் காண்பிக்கப்படும் அந்த பத்திரம். அந்த பத்திரம் 20 ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த பத்திரம் 2017 ஆம் வருடத்திய பத்திரம் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. 2017 இல் வாங்கிய பத்திரம் என்பதை ஒத்துக்கொண்டால் என் வழக்கிற்கு பாதகமாகக்கூடும் என்று நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பத்திரம் எழுதப்பட்ட காலத்தில் அதில் வீடு இருந்தது. பத்திரத்தில் சொத்து விவரத்தில் காலி மனை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீடு கட்டும் போது தான் பிரச்சனை ஏற்பட்டது. என் கணவர் வெளிநாட்டில் இருக்கும் போது தான் வீடு கட்டப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் உள்ளது. என் கணவர் சாட்சியமளிக்கும் போது, ஆவணங்கள் தன் தம்பியிடம் இருப்பதாக சொன்னது சரிதான். எங்களிடம் ஆவணங்கள் இல்லை. அந்த வீட்டிற்கு செலவு செய்த ஆவணங்கள் அனைத்தும் எங்கள் பெயரில் இல்லை. என் கொழுந்தனார் பெயரில் உள்ளது என்றால் சரி. எனக்கு பாஸ் போர்ட் உள்ளது. என்னிடம் காட்டப்படுவது என்னுடைய பாஸ்போர்ட்டின் நகல்தானா என்றால் ஆமாம். அந்த பாஸ்போர்ட் ஜெராக்ஸ் நகல் **பி.சா.ஆ. 2 ஆகும்.** எனக்கு திருமணம் நடந்த வருடம் 2013. பாஸ் போர்ட் எனக்கு திருமணம் நடந்த பின் தான் வாங்கினேன் என்றால் ஆமாம். அதில் நான் என் அம்மா வீட்டு முகவரியை கொடுத்திருக்கிறேன். தாவா சொத்து இடம் குறிப்பிடவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 பத்திரத்தை யார் தட்டச்சு செய்தது. யார் எழுதி கொடுத்தது என்று

தெரியாது. என் கொழுந்தனார் குணசேகரன் கையெழுத்து தமிழில் போடுவார் . ஆங்கிலத்திலும் போடுவார். அவர் தமிழில் கையெழுத்து போடமாட்டார் என்றும் வழக்கிற்காக தமிழிலும் போடுவார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த உறுதி மொழி பத்திரத்தை அனுசரித்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை. அறிவிப்பு அனுப்பாததற்கு காரணம் ஏதும் இல்லை . அவ்வாறு அறிவிப்பி அனுப்பியிருந்தால் நான் கையெழுத்தே போடவில்லை என்று பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பார் என்றாலும் அதனால் தான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல . இந்த 12 லட்சம் எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் திருமணம் செய்ததிருந்தில் இருந்து கணக்கு செய்யப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டது . அதற்கு எழுத்து பூர்வமான ஆவணங்கள் உள்ளதா என்றால் வாய் மொழியாக பேசிக்கொண்டது தான். நானும் என் கணவரும் சேர்ந்து குணசேகரனிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் ஆவணம் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.